தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 128 | 4 Pages | 6.12.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 128 | 4 பக்கங்கள் | 6.12.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யாப் படும்**

**விளக்கம்:** நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்கு முன்) நல்ல அறச்செயலை விரைந்து செய்யத்தக்கதாகும்.

# "திமுக அரசை வீட்டுக்கு அனுப்புவோம்" ஜெயலலிதா நினைவு நாளில் அதிமுகவினர் உறுதிமொழி

சென்னை, டிச.6

"குடும்ப ஆட்சியில் தந்தை, மகன், மருமகன் அதிகாரம் செலுத்தும், போலி திராவிட மாடலின் பொய் முகத்தை அம்பலப்படுத்துவோம்" என மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு நாளையொட்டி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்பட அக்கட்சியினர் உறுதிமொழி ஏற்றனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 8ம் ஆண்டு நினைவு நாள் இன்று (டிச.5) அனுசரிக்கப்படுகிறது. இந்நிலையில் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர் வளையம் வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனிடையே முன்னாள் முதல்வர், ஜெயலலிதா நினைவு தினத்தையொட்டி அவர் உறுதி மொழிகளை அறிக்கையாக வெளியிட்டுள்ளார். அந்த உறுதிமொழியில், "தீயசக்தியை விரட்டியடிக்க, குடும்ப ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிட கழகத்தை நிறுவிய நம் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் அயராது உழைப்போம். கழகம் காக்க, கர்ஜிக்கும் சிங்கமெனத் திகழ்ந்த புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் திமுக ஆட்சியை, வீட்டுக்கு அனுப்பிட, விண்ணை முட்டும் வீரர்களின், ஆர்ப்பரிப்பைப் பாரீர். பொய்யான வாக்குறுதிகளைத் தந்து, மக்களை ஏமாற்றி வரும், பொம்மை முதல்வர் ஆட்சிக்கு, முடிவு கட்டுவோம்.



குடும்ப ஆட்சியில் தந்தை முதல்வர், மகன் துணை முதல்வர், மருமகன் அதிகாரம் செலுத்தும், போலி திராவிட மாடலின் பொய் முகத்தை அம்பலப்படுத்துவோம். மக்கள் விரோத திமுக ஆட்சியிலே, குடிநீர் கட்டண உயர்வு; கழிவு நீர் வரி உயர்வு, சொத்து வரி உயர்வு, பால் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, பத்திரப் பதிவில் வழிகாட்டி மதிப்பு உயர்வு, பேருந்து கட்டண மறைமுக உயர்வு, ஏழை, எளிய மக்களின் வயிற்றில் அடிக்கும், ஈரமில்லாத, இரக்கமில்லாத தந்திர மாடல் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவோம்.

திமுக ஆட்சியிலே, தொடர் கொலை, கொள்ளை, வழிப்பறிச் சம்பவங்களால் சட்டம்ஒழுங்கு சீர் கெட்டுப் போச்சு! கள்ளச் சாராய மரணங்களால், ஏழை, எளிய மக்களின் குடும்பமே நிர்கதியாய் ஆச்சு. எங்கும் கஞ்சா போதைகளால், தமிழ்நாடே தத்தளித்துப் போச்சு. விடியா திமுக ஆட்சி தேவையா? என்று மக்கள் மனதில் எண்ணம் வந்திருக்கு. மக்கள் விரோத திமுக அரசை, வீட்டுக்கு அனுப்பும் வரை ஓயமாட்டோம்.

திமுக ஆட்சியில், குற்றவாளிகளுக்கு துளியும் பயமில்லை, தொடர் குற்றங்கள், இந்த ஆட்சியில் தொடர்கிறது. இங்கு தமிழகத்தில் ஆட்சி இருக்கிறதா ? இல்லையா? என்கிற கேள்வியை மக்கள் எழுப்பி வருகிறார்கள். தமிழ் நாட்டை, குற்றவாளிகளின் சொர்க்க பூமியாக மாற்றியிருக்கும் திமுக அரசே ராஜினாமா செய்.

அதிமுக ஆட்சியிலே சிறப்பான திட்டங்கள் மக்களுக்கு செழிப்பான திட்டங்கள் ஏழைகள் பசியாற, அம்மா உணவகங்கள் ஏழைகள் நலம் பெறவே, அம்மா மருந்தகங்கள் மாணவர்கள் பயன்பெறவே, மடிக்கணினி திட்டங்கள் தாலிக்குத் தங்கம் என்று, தாய்க்குலம் புகழும் திட்டங்கள் இத்திட்டங்களை நிறுத்திவிட்டால், ஜெயலலிதாவின் புகழை, மறைத்துவிடலம் என்று தீய சக்தியாளர்கள் நினைக்கின்றார்கள். அவர்களின் கொட்டத்தை அடக்கிடுவோம்.

ஆட்சிக்கு வந்தவுடன், நீட் தேர்வு ரத்தென்றார்! கல்விக் கடன் ரத்தென்றார். விலைவாசி குறையும் என்றார். பொய் முதல்வர் செய்தாரா?. இனி மேலும் தமிழர்களை ஏமாற்ற விடமாட்டோம் என்று உறுதி ஏற்கிறோம். வருகின்ற சட்டமன்றத் தேர்தல் களத்தில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் வழியில் நின்று, வென்று காட்டுவோம். தமிழகத்தில் கழக ஆட்சியை மீண்டும் அமைத்திடுவோம்" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஆண்களுக்கு மாதவிடாய் ஏற்பட வேண்டும் என விரும்புகிறேன் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி



புதுடெல்லி, டிச.6

மத்தியபிரதேசத்தில்சிறப்பாகசெயல்படவில்லைஎன்றஅடிப்படையில் பெண் நீதிபதிகள் பலர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களில் கர்ப்பிணியான அதிதி குமார் சர்மாவும் ஒருவர். இதன்பின்பு அவருடைய கர்ப்பம் கலைந்துள்ளது. இந்த காலகட்டத்தில் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். ஐகோர்ட்டு உத்தரவின்பேரில் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்கான உத்தரவு கடந்த 2023ம் ஆண்டு ஜூனில் பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டு நவம்பரில் இந்த விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு தானாக முன்வந்து விசாரணை மேற்கொண்டது. பணிநீக்கம் பற்றிய முடிவுக்காக ஐகோர்ட்டிடம் விளக்கமும் கேட்டுள்ளது. நடப்பு ஆகஸ்டில், அவர்களில் 4 நீதிபதிகளை மீண்டும் பணியில் அமர்த்துவது என கோர்ட்டு முடிவு செய்தது. ஆனால், அதற்கான பட்டியலில் அதிதி சர்மா இல்லை.

2019, 20 காலகட்டத்தில், மிக சிறந்த மற்றும் சிறந்த என்ற விகிதத்தில் இருந்து, அடுத்தடுத்த ஆண்டுகளில் சராசரி மற்றும் மோசம் என அவருடைய செயல்பாடு சரிந்தது என அறிக்கை ஒன்றில் ஐகோர்ட்டு தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டின் 2 பேர் கொண்ட நீதிபதிகள் அமர்வில் ஒருவரான நீதிபதி பி.வி. நாகரத்னா, இதுபோன்ற நடைமுறை ஆண் நீதிபதிகளுக்கும் அமல்படுத்த வேண்டும். இதனை கூறுவதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை என்றார்.

அவர் தொடர்ந்து, அந்த பெண் கர்ப்பிணியாக இருந்திருக்கிறார். கர்ப்பம் கலைந்தும் உள்ளது. மன மற்றும் உடல் அளவில் அவர் பேரதிர்ச்சியில் இருப்பார். இந்த சூழலில் என்னது இது ? என கூறிய அவர், ஆண்களுக்கும் மாதவிடாய் ஏற்பட வேண்டும் என நான் விரும்புகிறேன். அப்போதுதான், அது என்னவென்று அவர்களுக்கு தெரிய வரும் என்று கூறியுள்ளார்.

4 ஆண்டுகளாக கறைபடாத சேவையாற்றிய பதிவு உள்ள நிலையில், எந்தவித சட்ட நடைமுறையும் இன்றி அவர் பணி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார் என்றும் நீதிபதி ஆவேசத்துடன் கூறினார்.

இந்த நடவடிக்கையை அடுத்து அதிதி சர்மா ஐகோர்ட்டிடம் அளித்துள்ள பதிலில், கர்ப்பம் கலைந்த நாட்களில் தாய்மை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புக்கானவிடுமுறையில்இருந்தேன்.இதனைசெயல்பாட்டுக்கான கணக்கீடாக எடுத்து கொள்வது ஒரு பெரிய அநீதி என்று குறிப்பிட்டு உள்ளார். பணி நீக்கம் என்பது, சமத்துவத்திற்கான அடிப்படை உரிமையை மீறும் செயல் மற்றும் வாழ்வதற்கான உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் ஆகியவற்றை மீறுவது ஆகும் என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

## பழங்காலத்தில் இருந்தே மூலிகைகளின் மருத்துவ பலன்களை அறிந்தவர்கள் பழங்குடியினர்



புதுடெல்லி, டிச.6

ஜனாதிபதி திரவுபதி முர்மு கடந்த 3ந்தேதி) முதல் 7ந்தேதி வரையிலான 5 நாட்களுக்கு, ஒடிசாவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். அவர் பிரசித்தி பெற்ற பூரி ஜெகந்நாதர் கோவிலில் நேற்று சாமி தரிசனம் செய்து பூஜையிலும் பங்கு பெற்றார். இதன்பின்னர், இந்திய கடற்படை நாள் கொண்டாட்டத்திலும் பங்கேற்றார்.

கோபபந்து ஆயுர்வேத மகாவித்யாலயாவின் 75வது ஆண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜனாதிபதி முர்மு, பழங்காலத்தில் இருந்தே மூலிகைகளையும் மற்றும் அவற்றின்மருத்துவபலன்களையும்நன்குஅறிந்தவர்களாகபழங்குடியினர் உள்ளனர். ஆனால் இந்த பாரம்பரிய அறிவு, மெல்ல மறைந்து வருகிறது என வேதனை வெளியிட்டார்.

இந்த கல்லூரியின் மாணவர்கள், ஆயுர்வேத சிகிச்சைக்கான நடைமுறையின் அறிவியல் அடிப்படையை பற்றி படித்து அறிந்து கொள்வார்கள். அதனால், இந்த பாரம்பரிய நடைமுறை அழிந்து விடாமல் அவர்கள் பாதுகாப்பார்கள் என்றும் கூறினார்.

தொடர்ந்து அவர், இந்தியாவில் இயற்பியல், ரசாயனம், வானவியல், ஜோதிடம், மருத்துவம், கணிதம் மற்றும் கட்டிட கலை ஆகியவற்றில் வளமான பாரம்பரியம் உள்ளது என்றும் பெருமிதத்துடன் கூறினார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு, புவனேஸ்வரில் உள்ள ஒடிசா வேளாண் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் 40வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள இருக்கிறார்.

## இதய தெய்வம் அம்மா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு

பெரம்பூர், டிச.6

இதய தெய்வம் அம்மா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு விமர்சையாக நடைபெற்றது.

முன்னாள் தமிழக முதல்வர் மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ஆணைக்கிணங்க, இதய தெய்வம் அம்மா அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில், மாவட்ட கழகச் செயலாளர் R.S. ராஜேஷ் தலைமையில், பெரம்பூர் கிழக்குப் பகுதி கழகச் செயலாளர் D.Y.K. செந்தில்குமார், 46வது கிழக்கு வட்டச் செயலாளர் D. சரவணன், 46வது மத்திய வட்டச் செயலாளர் சீயான் C. செந்தில்குமார், 46வது மேற்கு வட்டச் செயலாளர் V. கோபிநாத், E.L. கோகுல கண்ணன் மற்றும் பெரம்பூர் பகுதி பிரதிநிதி சாமியார் T. ஜெயகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு செயல்பட்டனர். கழக செயல்வீரர்களின் பங்குடன், அம்மா திரு நினைவு களை சிறப்பாக போற்றும் விதத்தில் நிகழ்வு சிறப்பாக நடைபெற்று முடிந்தது.



## ஆயக்குடியில் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவேந்தல்

பழனி,டிச.6

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பேருந்து நிறுத்தம் அருகே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின்நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு பழனி சட்டமன்ற தொகுதி முன்னாள் வேட்பாளர் ரவி மனோகரன் பேரூர் செயலாளர் சசிகுமார் ஒன்றிய செயலாளர் RMTC மாரியப்பன், பெரியம்மா வட்டி தலைவர் சதீஷ்குமார் பால சமுத்திரம் பேரூர் செயலாளர் சக்திவேல், சுந்தரம், எஸ் கே கே ஹக்கீம் ஆகியோர் தலைமையில் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தப்பட்டன.

தொடர்ந்து இந்நிகழ்வில் பொன்.முருகானந்தம் அசோக்குமார் விளங்கடியான் காமேஸ்வரன் கற்பகராஜ்,ரமணிபாஸ், சின்ராஜ், திருமலைசாமி மகேஸ்வரன் கிருஷ்ணன், ரகுபதி, பழனிச்சாமி முருகன் தமீன்முன் அன்சாரி, தாமோதரன், விஜயகுமார், சபாபதி, செல்வராஜ், நாகராஜ், தாஜுதீன், மாரிமுத்து, முத்துசாமி, கணபதி, அறிவழகன், மோகன், வழக்கறிஞர் கிருஷ்ணன், ஆனந்தன், செல்வகிருஷ்ணன், ரமேஷ், எஸ்கே.முருகன், அங்குசாமி, ரவிச்சந்திரன், காமராஜ், உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் திருவுருப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினர்..



## வேலூரில் ஹெல்மெட் அணியாமல் வந்து போலீசிடம் சிக்கிய 500 வாகன ஓட்டிகள்; ஒரே நாளில் ரூ.5 லட்சம் அபராதம்

வேலூர், டிச.6

வேலூர் மாவட்டத்தில் வாகன விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு பல்வேறு கட்ட நடவடிக்கைகளை போக்குவரத்து போலீசார் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் மாவட்ட போக்குவரத்து துறை டிசம்பர் ஒன்றாம் தேதி முதல் ஹெல்மெட் கட்டாயம் அணிய வேண்டும் என அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் இன்று (டிசம்பர்.2) வேலூர் மாநகரத்துக்குட்பட்ட மக்கான் சிக்னல், கிரீன் சர்க்கிள், செல்வி அம்மன் ஆலயம் அருகே என பல்வேறு இடங்களில் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது இருசக்கர வாகனத்தில் வரும் இரண்டு நபரும் ஹெல்மெட் அணிந்து வருபவர்களுக்கு பேனா, கீ செயின், பொம்மைகளை பரிசாக வழங்கினர்.

ஹெல்மெட் அணிந்து வந்தவர்களுக்கு பொம்மை பரிசாக வழங்கும் காவலர்

மேலும், ஹெல்மெட் அணியாமல் வாகனங்களை இயக்கி வருபவர்களிடம் வாகன எண்ணை செல்போனில் படம் பிடித்தும், போக்குவரத்து டிராபிக் சிக்னலில் உள்ள (ANPR ஆட்டோமேட்டிக் நம்பர் பிளேட் ரெகக்னிஷன் ) கேமரா மூலம் ஹெல்மெட் அணியாமல் வந்த 500க்கும் மேற்பட்ட வாகன ஓட்டிகளுக்கு ரூ.1000 அபராதம் விதித்தனர்.

அப்போது, வேலூர் புதிய பேருந்து நிலையம், செல்வி அம்மன் கோவில் அருகே உள்ள ஒரு வழி பாதையான பாலாற்று மேம்பாலத்தின் மேல் போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருப்பதை கண்ட ஹெல்மெட் அணியாத வாகன ஓட்டிகள் ஆபத்தை உணராமல் அவர்கள் வந்த ஒரு வழி பாதையில் திடீரென வாகனத்தை திரும்பிச் சென்றனர். இதனால் சிறிது நேரம் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



இந்நிலையில் வேலூர் மாவட்டத்தில் மட்டும் இன்று ஹெல்மெட் அணியாமல் வந்த 500 பேரிடம் 5 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் ஹெல்மெட் அணிவதின் அவசியம் குறித்து போக்குவரத்து போலீசார் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு நாடகம், விழிப்புணர்வு அறிவுரைகள் வழங்கினர்.



இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற குறைதீர்ப்பு முகாமில் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.சந்தீஷ்.இ.கா.பஅவர்கள் பொதுமக்களிடம் புகார் மனுக்களை பெற்று உடனுக்குடன் தீர்வு காண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

## 'பேக்கேஜ் டெண்டர்' முறையை ரத்து செய்யக்கோரி வழக்கு மதுரை ஐகோர்ட் அதிரடி கருத்து



புதுக்கோட்டை, டிச.6

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த முத்துக்குமார், ராயர், ரெங்கராஜன் உள்ளிட்ட 8 பேர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

நாங்கள் அனைவரும் தமிழக அரசின் முதல் நிலை காண்டிராக்டர்கள். திருச்சி நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு சாலைப் பணிகளுக்கான டெண்டர் அறிவிப்பை கடந்த மாதம் வெளியிட்டு இருந்தார்.

இந்தப் பணிகளின் மதிப்பு ரூ.2 கோடி முதல் ரூ.6 கோடி வரை உள்ளது. இதில் மொத்தம் 49 சாலைப் பணிகள் உள்ளன. இந்தப் பணிகள் அனைத்துக்கும் பேக்கேஜிங் டெண்டர் முறையை பின்பற்றி காண்டிராக்டர்களுக்கு பணிகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

அதிகாரிகளின் இந்த நடவடிக்கையினால் எங்களைப்போன்ற காண்டிராக்டர்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகின்றனர். பல்வேறு பணிகளையும் ஒரு சிலரிடம் ஒப்படைப்பதால் சம்பந்தப்பட்ட பணிகள் முழுமையாக சிறப்பாக நிறைவேற்றப்படுவது இல்லை.

நபார்டு வங்கி மூலம் நிறைவேற்றப்படும் சாலை பணிகளுக்கு தனித்தனியாக டெண்டர் நடத்த வேண்டும் என்பது விதிமுறை. ஆனால் இது போல பொதுப்பணித்துறையில் நடைமுறையில் இருந்த பேக்கேஜிங் டெண்டர் முறை தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே நெடுஞ்சாலை துறையிலும் பேக்கேஜிங் டெண்டர் முறைக்கான அரசாணையை ரத்து செய்ய வேண்டும்." என குறிப்பிட்டிருந்தது.

இதே போல மேலும் சிலரும் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகள் நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், மரியகிளாட் ஆகியோர் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் சார்பில் வக்கீல் கணபதி சுப்பிரமணியன் ஆஜராகி, புதுக்கோட்டை மாவட்டத் தில் சுமார் 50 முதல் நிலை காண்டிராக்டர்கள் உள்ளனர். சாலை பணிகளுக்கான பேக்கேஜிங் டெண்டர் முறையினால் சில காண்டிராக்டர்கள் மட்டுமே பயனடைகின்றனர். இதனால் விரைவாக பணிகளை முடிக்க இயலாததால், அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது என வாதாடினார்.

பின்னர் ஆஜரான கூடுதல் அட்வகேட் ஜெனரல் ரவீந்திரன், மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்படுவது வெவ்வேறு துறை சார்ந்த நடவடிக்கை. எனவே அவர்களின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என தெரிவித்தார்.

அப்போது நீதிபதிகள், குறிப்பிட்ட சில காண்டிராக்டர்கள் மட்டும் முன்னேற்றம் அடைந்தால் சரியாக இருக்குமா? சிறிய காண்டிராக்டர்கள் உள்பட அனைத்து தரப்பு காண்டிராக்டர்களும் வேலை பெறுவது தான் சரியானது என கருத்து தெரிவித்தனர்.

இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதிகள், இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

## திருப்பூரில் இந்து அமைப்பினர் தடையை மீறி ஆர்ப்பாட்டம் 400 பேர் கைது




திருப்பூர், டிச.6

இந்தியாவின் அண்டை நாடான வங்கதேசத்தில் சிறுபான்மையாக உள்ள இந்து மக்களை அங்குள்ள காவல் துறையினர் தாக்கி கைது செய்து ஆலயங்களை சேதப்படுத்துவதை கண்டித்தும், இந்து மக்கள் உரிமைகள் மீட்கப்பட வேண்டும் என வலியுறுத்தி திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பாக பா.ஜ.க., இந்து முன்னணி, ஆர். எஸ் .எஸ். உள்ளிட்ட இந்து அமைப்புகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பாஜக., மாவட்ட தலைவர் செந்தில்வேல், ஆர். எஸ்.எஸ். மாவட்ட தலைவர் ஆர்ம்ஸ்ட்ராங் பழனிசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்திருந்த நிலையில் அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 400 பேரை போலீசார் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை போலீசார் அரசு பேருந்தில் ஏற்ற முயன்றனர். ஆனால் காவல்துறை வாகனத்தில் தான் செல்வோம் என இந்து அமைப்பினர் தெரிவித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனையடுத்து பேருந்துகள் திருப்பி அனுப்பப்பட்டு காவல்துறை வாகனம் மூலம் கைது செய்யப்பட்டு அழைத்து செல்லப்பட்டனர்.

## வங்கதேச இந்துக்களுக்கு ஆதரவாக போராட்டம் தமிழிசை உள்பட இந்து அமைப்பினர் 500 பேர் கைது



சென்னை, டிச.6

வங்கதேசத்தில் சிறுபான்மை இந்துக்கள் மீது நடத்தப்படும் வன்முறை தாக்குதல்கள், சொத்துக்களை சூறையாடுதல் போன்ற சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்தும், வங்கதேசத்தில் சிறுபான்மை யினராக வாழும் இந்துக்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு வழங்க கோரியும் வங்கதேச இந்து உரிமை மீட்பு இயக்கம் சார்பில் எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, பா.ஜனதா, விசுவ இந்து பரிஷத், ஏ.பி.வி.பி. உள்ளிட்ட பல்வேறு இந்து அமைப்புகளை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னாள் கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், பா.ஜனதா அமைப்பு செயலாளர் கேசவ விநாயகன், துணை தலைவர் கரு.நாகராஜன், மாநில செயலாளர் சுமதி வெங்கடேஷ், மாவட்ட தலைவர்கள் தனசேகரன், கிருஷ்ணகுமார், மனோகர், சாய் சத்யன், காளிதாஸ், மாவட்ட பொதுச் செயலாளர் லதா சண்முகம் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டம் நடத்த இருந்த இடத்தில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர். ஆர்ப்பாட்டத்துக்கு கட்ட இருந்த பேனரை கட்டவிடாமல் தடுத்ததோடு ஆர்ப்பாட்டம் நடத்தாமல் தடுப்பதில் போலீசார் குறியாக இருந்தனர்.


தொண்டர்கள் வரவர வலுக்கட்டாயமாக பிடித்து பஸ்களில் ஏற்றினார்கள். அங்கு யாரையும் கூடுவதற்கே அனுமதிக்கவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த தொண்டர்கள் போலீசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் எதைப் பற்றியும் கண்டு கொள்ளாமல் அனைவரையும் பிடித்து சென்றனர். ஆர்ப்பாட்டத்தில் பேசுவதற்காக ஒலிபெருக்கிகளும் வைக்கப்பட்டிருந்தன.

டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், கேசவ விநாயகன், கரு.நாகராஜன் உள்பட இந்து அமைப்பினர் சுமார் 500 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் சுவாமி சிவானந்தா சாலை மற்றும் எழும்பூரில் உள்ள மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளர்கள்.

திருவள்ளூரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## மானாமதுரை அரசு ஆஸ்பத்திரியில் மின்தடை ரெயில்வே ஊழியருக்கு செல்போன் டார்ச் வெளிச்சத்தில் டாக்டர்கள் சிகிச்சை



மானாமதுரை, டிச.6

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் அரசு ஆஸ்பத்திரி செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனைக்கு மானாமதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள சுமார் 400க்கும் மேற்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் சிகிச்சை பெற வந்து செல்கிறார்கள். இங்கு விபத்து காய சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே சமீபத்தில் பெய்த தொடர் மழை மற்றும் சூறைக்காற்று காரணமாக மானாமதுரை நகர் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி குடியிருப்பு பகுதிகளிலும் தாழ்வாக செல்லும் மின்சார வயர்கள், மரங்களின் மீது உரசும் வயர்களால் ஏற்படும் மின்தடையானது பல நேரங்கள் கழித்த பிறகே சரி செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் இது போன்ற மின்தடையால் அரசு ஆஸ்பத்திரியில் செல்போன் டார்ச் லைட் வெளிச்சத்தில் ஒருவருக்கு சிகிச்சைஅளித்த சம்பவம்பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதுபற்றிய விபரம் வருமாறு:

மானாமதுரை அருகே யுள்ள கீழபசலை கிராமத்தை சேர்ந்தவர் பாலமுருகன். ரெயில்வே ஊழியரான இவரை முன்விரோதம் காரணமாக மர்மநபர்கள் சிலர் நேற்று இரவு வழி மறித்து அரிவாளால் சரமாரியாக வெட்டினர். இதில் தலை மற்றும் உடலில் பலத்த காயம் அடைந்த அவர் மயங்கி சரிந்தார்.

இதையடுத்து அந்த வழியாக வந்தவர்கள் பார்த்து அவரை மீட்டு மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்க டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் தயாரானார்கள். அப்போது எதிர்பாராதவிதமாக மின்தடை ஏற்பட்டது. இதனால் ரத்தம் சொட்ட சொட்ட வலியால் துடித்த பாலமுருகனுக்கு சிகிச்சை அளிப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

அப்போது டாக்டர்கள் வேறு வழியின்றி செவிலியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் ஆகியோரின் செல்போன்களில் டார்ச் லைட்டை எரியவிடுமாறு கூறினர். அந்த வெளிச்சத்தில் அரிவாள் வெட்டு காயம் அடைந்த பாலமுருகனுக்கு தலையில் தையல் போடப்பட்டது. இதனை அங்கிருந்த ஒருவர் தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்துள்ளார். அந்த வீடியோ இன்று வைரலாகி உள்ளது.

அவசரகால சிகிச்சைக்கு கூட ஒரு ஜெனரேட்டர் வசதியோ அல்லது பேட்டரி வசதியோ இல்லாத நிலையில் ரெயில்வே ஊழியருக்கு டார்ச் லைட் வெளிச்சத்தில் டாக்டர்கள் சிகிச்சைஅளித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக ஆஸ்பத்திரி நிர்வாகம் பதில் அளிக்க வேண்டும் என்று பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைந்தது: பரிசல் இயக்க, குளிக்க 2வது நாளாக தடை



ஒகேனக்கல், டிச.6

கர்நாடகம் மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள கே.ஆர்.எஸ்., கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணைகளில் இருந்து உபரி நீர் தமிழக காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டது.

மேலும் கடந்த சில நாட்களாக தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, பிலிகுண்டுலு, ராசி மணல் உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதனால் நேற்று ஒகேனக்கல்லுக்கு வினாடிக்கு 43 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்தது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 35 ஆயிரம் கனஅடியாக குறைந்தது.

இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

காவிரி ஆற்றின் இருகரையும் தொட்டபடி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மெயின் அருவிக்கு செல்லும் நடைபாதைக்கு மேல் வெள்ளம் கரைபுரண்டு சென்றன.

நீர்வரத்து அதிகரித்து வந்ததால் அருவிகளில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் இன்று 2வது நாளாக மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. இதனால் மெயின் அருவிக்கு செல்லும் பாதை பூட்டப்பட்டு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பரிசல் ஓட்டிகள் பரிசலை காவிரி ஆற்றின் கரையோரம் கமத்தி வைத்தனர்.

குளிக்க தடை விதிக்கப்பட்ட நிலையில் சுற்றுலா பயணிகள் மெயின் அருவியில் குளிக்க முடியாமலும், பரிசலில் பயணம் செல்ல முடியாமலும் ஏமாற்றம் அடைந்தனர்.

மேலும் காவிரி ஆற்றின் கரையோரம் சுற்றுலா பயணிகள் குளிக்காதவாறு ரோந்து பணியில் ஈடுபட்டு போலீசார் கண்காணித்து வருகிறார்கள்.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர் வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## திருப்பூர் மார்க்கெட்டில் அதிரடி சோதனை 330 கிலோ சீனா பூண்டுகள் பறிமுதல்



திருப்பூர், டிச.6

திருப்பூரில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் சீனா பூண்டுகள் விற்பனை செய்யப்படுவதாக திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரிக்கு ரகசிய தகவல்கள் வந்தன.

இதனையடுத்து இன்று திருப்பூர் மார்க்கெட் மற்றும் பூண்டு மண்டிகளில் திருப்பூர் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரி விஜயலலிதாம்பிகை தலைமையிலான அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது பல்வேறு இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 330 கிலோ சீனா பூண்டுகளை பறிமுதல் செய்தனர்.

மேலும் அவை பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மாவட்டம் முழுவதும் அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள்.

## சின்ன உடைப்பு கிராம மக்கள் மீண்டும் போராட்டம் கூடுதல் இழப்பீடு வழங்க கோரிக்கை



மதுரை, நவ.6

மதுரை விமான நிலையம் 633.17 ஏக்கர் பரப்பளவில் விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டு, சின்ன உடைப்பு, பரம்புபட்டி உள்ளிட்ட கிராமங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சின்ன உடைப்பு கிராமத்தில் மட்டும் விரிவாக்கத்திற்காக 146 நபர்களின் வீடுகள் மற்றும் நிலங்கள் என 189 ஏக்கர் நிலம் கையகப்படுத்த உள்ளதாக கடந்த 2009ம் ஆண்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்கான பணிகளை செய்து வந்த நிலையில் அந்த ஆண்டு அப்போதைய நில மதிப்பீடு கணக்கிடப்பட்டு கடந்த 2022ம் ஆண்டு நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு நிதி வழங்கப்பட்ட தாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

தற்போது ஊருக்கு வெளியே விமான நிலைய சுற்றுச்சுவர் எழுப்பும் பணிகள் நிறைவடைந்த நிலையில்சின்னஉடைப்பு கிராமத்தில் நிலங்களை கையகப்படுத்தும் பணி விரைவில் தொடங்க உள்ளது. இதற்கிடையில் அந்த கிராம மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை எனவும், 2009 கணக்கெடுப்பின்படி வழங்கப்பட்ட நிதியை, 2013 நில எடுப்பு சட்டப்படி கணக்கிட்டு வழங்க வேண்டும் என தெரிவித்து வருகின்றனர்.

மேலும் வீடுகளை இழந்த தங்களுக்கு அரசு 3 சென்ட் இடம் ஒதுக்கீடு செய்து அதில் மீள் குடியேற்றம் குடியிருப்புகள் அனைத்து வசதிகளுடன் செய்து தர வேண்டும் என கோரிக்கை விடுத்து அதுவரை தங்கள் வீடுகளை காலி செய்ய மாட்டோம் என தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக கடந்த 13 ந் தேதி சின்ன உடைப்பு கிராம மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 20ந் தேதி நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக மதுரை ஐகோர்ட்டு கிளையில் வழக்கை விசாரித்த நீதிபதிகள் நிலம் கையகப்படுத்த இடைக்கால தடை உத்தரவு விதித்தனர். மேலும் நிலம் கையகப்படுத்துதல்சட்டபிரிவின்படி நோட்டீஸ் வழங்க வேண்டும். அதனைப் பின்பற்றி நிலங்களை கையகப்படுத்தலாம். அதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என தெரிவிக்கப்பட்டது.

தங்களுக்கு சாதகமாக தீர்ப்பு வந்ததால் தற்காலிகமாக போராட்டத்தை வாபஸ் பெறுவதாக போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

மேலும் வருகிற 11ந் தேதி உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இந்த வழக்கு விசாரணை வர உள்ளது. இந்த நிலையில் தங்களுக்கு கூடுதல் இழப்பீடு வழங்கக்கோரி சின்ன உடைப்பு கிராம மக்கள் இன்று மீண்டும் தொடர் போராட்டத்தை தொடங்கி உள்ளனர். இதில் பெண்கள் உள்பட 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

# சென்னை விமான நிலையத்தில் வாகன நிறுத்த கட்டணம் திடீர் உயர்வு பயணிகள் அதிர்ச்சி

ஆலந்தூர், டிச.6

சென்னைவிமானநிலையத்தில் கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் 4ந்தேதி அடுக்குமாடி வாகன நிறுத்தம் செயல்பாட்டிற்கு வந்தது. அப்போது ஏற்கனவே இருந்த வாகன நிறுத்த கட்டணம் உயர்த்தப்பட்டது.

மேலும் வாகனங்களை அங்கு நிறுத்தி விட்டு மீண்டும் வெளியே கொண்டு வருவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருகிறது.

இதற்கான வழிகள் தெளிவாக இல்லை என்று பயணிகள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் அதிருப்தி அடைந்து உள்ளனர்.

இந்த நிலையில் சென்னை விமான நிலையத்தில் வாகன நிறுத்த கட்டணம் 2 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று முதல் மீண்டும் திடீரென உயர்த்தப்பட்டு உள்ளது. ரூ.5 முதல் ரூ.50 வரை அதிகரித்து இருக்கிறது.



கார்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ. 80 ஆக இருந்த நிலையில் தற்போது ரூ. 85 ஆகவும் கார்களுக்கு அதிகபட்சம் 24 மணி நேரத்திற்கு ரூ. 525 ஆக இருந்தது ரூ.550 ஆகவும் உயர்ந்து உள்ளது. டெம்போ வேன்களுக்கு குறைந்தபட்ச கட்டணம் ரூ.315 ஆக இருந்தது, தற்போது ரூ.330 ஆகவும் 24 மணி நேரத்திற்கு கட்டணம் ரூ.1,050 ஆக இருந்தது ரூ.1,100ஆக அதிகரித்து உள்ளது. பஸ், லாரிகளுக்கான குறைந்தபட்ச கட்டணம் ரூ.630 ஆக இருந்தது, தற்போது ரூ.660 ஆகவும் 24 மணி நேரத்திற்கான கட்டணம் ரூ.2,100 ஆக இருந்தது ரூ.2,205 ஆகவும் உள்ளது.

இருசக்கர வாகனங்களும் இந்த கட்டண உயர்வுக்கு தப்பவில்லை. 30 நிமிடங்களில் இருந்து ஒரு மணி நேரம் வரைகட்டண உயர்வு இல்லாமல், பழைய கட்டணமான ரூ.20 மட்டுமே வசூலிக்கப்படுகிறது. ஒரு மணி நேரத்தில் இருந்து 2 மணி நேரம் வரை ஏற்கனவே ரூ.30 ஆக இருந்த கட்டணம் ரூ.35 ஆகவும், 24 மணி நேரத்திற்கான பழைய கட்டணம் ரூ.95 தற்போது ரூ.100 ஆகவும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. சென்னை விமான நிலையத்தில் பார்க்கிங் கட்டணம் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, திடீரென உயர்த்தப்பட்டுள்ளது. பயணிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# பனையூரில் வைத்து நிவாரணம்: விஜய்க்கு சீமான் ஆதரவு

திருப்பூர், டிச.6

வெள்ளத்தால்பாதிக்கப்பட்டமக்களுக்குத.வெ.க. தலைவர் விஜய் பனையூர் அலுவலகத்தில் வைத்து நிவாரணம் வழங்கியது கடும் விமர்சனத்துக்குள்ளாகி உள்ளது.

இந்த நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் களத்தில் நிற்க முடியவில்லை என்றாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என நினைத்ததை பாராட்டலாம் என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

மேலும் சீமான் கூறுகையில், விஜய் பாதிக்கப்பட்ட இடத்திற்கு சென்றால் பாதிக்கப்பட்டோரின் கூட்டத்தை விட அவரை பார்க்க வந்தோரின் கூட்டம் அதிகரிக்கும் என்பதால் களத்திற்கு விஜய் செல்லவில்லை. கூட்டம் கூடி பிரச்சனை ஏற்பட்டால் அதற்கும் விமர்சனம் செய்வீர்கள். விஜய் கொடுக்க வேண்டும் என நினைப்பதே பெரிய விஷயம்தான். விஜய் அளித்த நிவாரணத்தை கூட மற்றவர்கள் அளிக்கவில்லையே? நிவாரணம் கொடுக்கவேண்டும்என்ற எண்ணத்தை பாராட்ட வேண்டும் என்றார்.



# இரு நாட்கள் ரத்து செய்யப்பட்ட மலை ரயில் மீண்டும் இயக்கம்

குன்னூர், டிச.6

புயல் மற்றும் கனமழை காரணமாக, இரு நாட்கள் ரத்து செய்யப்பட்ட மலை ரயில் இயக்கம் நேற்று துவங்கியது.

வங்க கடலில் ஏற்பட்ட 'பெஞ்சல்' புயல் காரணமாக, தமிழகத்தில் கனமழை நீடித்தது. நீலகிரி மாவட்டத்தில், இரவில் கனமழை கொட்டி தீர்த்த போதும், பகலில் மேக மூட்டம் மற்றும் சாரல் மழை காலநிலை நிலவுகிறது. இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இரு நாட்கள் ரத்து செய்யப்பட்ட நீலகிரி மலை ரயில்கள் அனைத்தும், நேற்று முதல் வழக்கம் போல இயங்க துவங்கின.

மேட்டுப்பாளையத்தில் இருந்து காலை, 7:10 மணிக்கு மலை ரயில் புறப்பட்டு, ஊட்டிக்கு சென்றது. இதே போல காலை, 7:45 மணிக்கு குன்னூரில் இருந்து ஊட்டிக்கு உள்ளூர் ரயில் புறப்பட்டு சென்றது. மலை ரயில் இயக்கப்பட்டு வருவதால் சுற்றுலா பயணியர் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது.

# இந்து அமைப்பினர் போராட்டம்: கோவையில் எச்.ராஜா உள்பட 500 பேர் கைது

கோவை, டிச.6

வங்காள தேசத்தில் இந்துக்கள்மீதானதாக்குதலை கண்டித்து இன்று தமிழகம் முழுவதும் இந்து அமைப்பினர் மற்றும் பா.ஜ.க.வினர் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

கோவையிலும் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. கோவை டாடாபாத் பகுதியில் பா.ஜ.க வங்கதேச இந்துக்கள் உரிமை மீட்புக் குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

போராட்டத்திற்கு மாவட்ட தலைவர் ரமேஷ்குமார் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக பா.ஜ.க நிர்வாகி எச்.ராஜா கலந்து கொண்டார். போராட்டத்தில் கோவை மாநகர் மாவட்டத்தை சார்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.




போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் கைகளில் பதாகைகள் ஏந்தி, வங்காளதேசத்தில் இந்துக்கள் தாக்கப்படுவதை கண்டித்தும், அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்திற்கு போலீசார் அனுமதி மறுத்திருந்தனர். அனுமதியை மீறி இன்று போராட்டம் நடந்தது. போராட்டத்தையொட்டி அங்கு காட்டூர் துணை கமிஷனர் கணேசன் தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ.க நிர்வாகி எச்.ராஜா, மாவட்ட தலைவர் ரமேஷ்குமார் உள்பட 500க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினரை போலீசார் கைது செய்து வேனில் ஏற்றினர். பின்னர் அவர்களை அருகே உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைத்தனர். போராட்டம் காரணமாக அந்த பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. முன்னதாக பா.ஜ.க நிர்வாகி எச்.ராஜா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

வங்காளதேசத்தில் பிரதமராக இருந்த ஷேக் ஹசினாவின் ஆட்சி எதிர்க்கட்சிகள்மற்றும்ராணுவத்தின் சதியால் அகற்றப்பட்டுள்ளது. அங்கு புதிதாக இடைக்கால அரசு பொறுப்பேற்றது முதல் இந்துக்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது.

சிறுபான்மை மக்களான இந்துக்கள் அதிகளவில் தாக்கப்படுகிறார்கள். அவர்களின் உடைமைகள், பொருட்கள், கோவில்கள் என அனைத்தும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் இஸ்கான் நிர்வாகி ஒருவரை கைது செய்தனர். அவரை ஜாமினில் எடுக்க முயன்ற வக்கீல் கொல்லப்பட்டுள்ளார். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அண்டை நாடான வங்காள தேசத்தில் இந்துக்கள் மீது நடத்தப்படும் இந்த தாக்குதல்களை ராகுல் காந்தியோ, மம்தா பானர்ஜியோ, தமிழக முதலமைச்சர்மு.க.ஸ்டாலினோ கண்டு கொள்ளவில்லை. நாங்கள் வங்காள தேச இந்துக்களின் பாதுகாப்புக்காக போராட அனுமதி கேட்டோம். அதற்கும் தமிழக அரசு அனுமதி மறுத்து விட்டனர். போராட்டத்திற்கு அனுமதி மறுக்கும் தமிழக அரசு அகற்றப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதேபோல் பொள்ளாச்சியில் பா.ஜ.க மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் ஆர்ப்பாட்டம் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்து வாகனத்தில் குண்டுக்கட்டாக ஏற்றி கைது செய்தனர். 30 பெண்கள் உள்பட மொத்தம் 155 பேர் கைதானார்கள்.

# பெஞ்சலால் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு நிவாரணம்

திருவண்ணாமலை, டிச.6

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட மண்சரிவில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்த ரூ.5 லட்சத்திற்கான நிவாரணத் தொகையை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வில், துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி, மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன், டாக்டர் எ.வ.வே. கம்பன் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அரசு சார்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி உதவிகள் செய்யப்பட்டதுடன், எதிர்கால நடவடிக்கைகளும் உறுதிசெய்யப்பட்டன.



# தென்கிழக்காசிய நாடுகளுக்கான சேவையில் முதலிடம் பிடிக்கும் திருச்சி விமான நிலையம்

திருச்சி, டிச.6

திருச்சி விமான நிலையத்தில் இருந்து, தற்போது மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்துக்கு வாரம் 62 விமானங்கள் இயக்கப்படுகிறது. பெரிய அளவிலான விமானங்கள் இயக்க போதிய ரன்வே இல்லாத போதும், அதிக விமான சேவைகளை அளித்து, பயணிகள் சேவையில் முக்கிய பங்காற்றி வருகிறது.

கடந்த 202324 நிதியாண்டில், சிங்கப்பூருக்கான பயணிகள் போக்குவரத்தில் இந்திய விமான நிலையங்களில் 5.5 லட்சம் பயணிகள் கையாண்டு 4வது இடமும், கோலாலம்பூர் சேவையில் 3.4 லட்சம் பயணிகளை கையாண்டு 3வது இடத்தை திருச்சி பிடித்தது.

டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூரு, கொல்கத்தா ஆகிய 5 மெட்ரோ விமான நிலையங்கள் தென்கிழக்கு ஆசியாவுடனான பயணிகள் போக்குவரத்தில் திருச்சியை விட அதிக அளவில் பயணிகள் போக்குவரத்தை கையாண்டுள்ளன.




இந்த நிலையில், திருச்சிமலேசியா சேவையில் பயணிகளிடம் வரவேற்பை பெற்றுள்ள நிலையில், ஏர்ஏசியா, மலிண்டோ விமான நிறுவனங்கள் கூடுதல் சேவை அளிக்க முன்வந்துள்ளன.

அதன்படி, நாளை (5ம் தேதி) முதல் வாரத்துக்கு கூடுதலாக ஏர் ஏசியா 3 சேவை, மலிண்டோ 7 சேவை என மலேசியாவுக்கு 10 சேவைகளை இயக்க உள்ளன. இதன் மூலம் தென்கிழக்காசிய நாடுகளுக்கான சேவையில், மெட்ரோ அல்லாத விமான நிலையங்களில் திருச்சி முதலிடம் என்கிற (72 சேவைகள்) பெருமையை பெற்றுள்ளது.

கூடுதல் விமான சேவையால் பயணிகள் எண்ணிக்கை ஆண்டுக்கு 1 மில்லியன் அதிகரிக்கக்கூடும் என விமான நிலைய வட்டாரத்தில் கூறப்படுகிறது.

திருச்சிமஸ்கட் இடையே வாரந்தோறும்புதன்கிழமை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் சேவை அளித்து வருகிறது. வரும் ஜனவரி மாதம் 6ம் தேதி முதல் கூடுதலாக திங்கள் கிழமைகளிலும் இயக்கப்படவுள்ளது. இதேபோல தம்மாம் இடையே ஜன 2ம் தேதி முதல் வெள்ளிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை என வாரம் 2 சேவை அளிக்கப்படவுள்ளது. இதற்கான முன்பதிவினை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் தொடங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக பக்ரைன், ரியாத், ஜித்தா ஆகிய வளைகுடா நகரங்களுக்கு விமான சேவை அளிக்க வேண்டும் என பயணிகள் மத்தியில் கோரிக்கை எழுந்துள்ளது.

# தமிழகத்தில் அடுத்த 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, டிச.6

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று மற்றும் நாளை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

6ந்தேதி முதல் 10ந்தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32°33° செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° 27°செல்சியசைஒட்டியும் இருக்கக்கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32°33° செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°27° செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும்.

# எருமேலி, புல்மேடு வனப்பாதையில் மீண்டும் பக்தர்களுக்கு அனுமதி

கூடலூர், டிச.6

கேரள மாநிலத்தில் 4 மாவட்டங்களுக்கு நவம்பர் 30ந் தேதி முதல் நேற்று வரை கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதனால் அவ்வப்போது கனமழையும், சாரல் மழையும் பெய்து வந்தது.

சபரிமலை ஐயப்பன் கோவில் அமைந்துள்ள பத்தினம்திட்டா மாவட்டத்திலும் கனமழை பெய்து பம்பையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பக்தர்கள் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. நேற்று மாலை முதல் மழையின் தீவிரம் படிப்படியாக குறையத் தொடங்கியது. இதனால் பக்தர்கள் எவ்வித சிரமமின்றி சாமி தரிசனம்செய்துதிரும்பினர்.

கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதால்குமுளி, சத்திரம், புல்மேடு, எருமேலி, முக்குழி, சபரிமலை பாதைகளில் பக்தர்கள் செல்ல தற்காலிக தடை விதிக்கப்பட்டது. இதனால் கடந்த 2ந் தேதி முதல் இந்த பாதையில்பக்தர்கள்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

தற்போது கனமழை குறைந்துள்ளதால் 2 நாட்களுக்கு பிறகு புல்மேடு பாதையில்பக்தர்கள்செல்ல அனுமதி வழங்கப்பட்டது. கடந்த 2 நாட்களாக புல்மேடு பாதையில் பயணம் செய்வதற்காக சத்திரம் வந்த நூற்றுக்கணக்கான பக்தர்களை கேரள அரசு போக்குவரத்துக்கழக பஸ்கள் மூலம் பம்பைக்கு அழைத்துச் சென்றனர்.

தற்போது மண்டல பூஜையின்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயத்தில் அதனை எதிர்கொள்ள தேசிய பேரிடர் நிவாரணப்ப டையினர் அடங்கிய சிறப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

மழை குறித்து முன் அறிவிப்பு வந்ததும் பம்பையில் செய்யவேண்டியஅனைத்து ஏற்பாடுகளும் செய்து போலீஸ், தீயணைப்புத்துறை மற்றும் பேரிடர் நிவாரண படையினர் தயாராக இருக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2 நாட்களுக்கு பிறகு புல்மேடு பாதையில் இன்று காலை முதல் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டதால் ஆர்வத்துடன் அதில் பயணம் செய்தனர்.


பத்தினம்திட்டா மாவட்டத்தில் மழை குறைந்துள்ள போதிலும் கடும் குளிர் வாட்டி வருகிறது. இதனால் பக்தர்களை பாதுகாக்க தேவசம்போர்டு சார்பில் சுக்கு உள்ளிட்ட மூலிகை கலந்த குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடைபந்தல், சன்னிதானத்தில் வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்குஇந்தமூலிகை குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. கடும் குளிர் மற்றும் பனியால் பக்தர்களின் உடல்நலம் பாதிக்காமல் இருக்கவும், புத்துணர்வு ஏற்படவும் மூலிகை குடிநீர் வழங்கப்படுவதாக கோவில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இரட்டை இலை வழக்கு: ஓ.பி.எஸ். கருத்துக்களை கேட்டு முடிவெடுக்க உயர்நீதிமன்றம் உத்தரவு

திண்டுக்கல், டிச.6

திண்டுக்கல்லைச் சேர்ந்த சூர்யமூர்த்தி தாக்கல்செய்துள்ளமனுவில், அதிமுகவின் உள்கட்சி விவகாரம் தொடர்பாகவும், கட்சி சட்டதிட்டங்களுக்கு விரோதமாக செயல்பட்டது தொடர்பாகவும் தேர்தல் ஆணையத்துக்கு 2017 முதல் 2022 ம் ஆண்டு வரை புகார்கள் அளித்துள்ளதாகக் குறிப்பிட்டு உள்ளார்.





உள்கட்சி விவகாரம் உள்ளிட்ட பிரச்சனை தொடர்பாக தாக்கல் செய்திருக்கும் உரிமையியல்வழக்குகள்முடிவுக்கு வரும் வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு அளித்த மனுவுக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை எனவும் மனுவில் தெரிவித்து இருந்தார்.

தனது மனு மீது விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்து இருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை சென்னை ஐகோர்ட்டில் இன்று நடைபெற்றது.

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், சூர்ய மூர்த்தியின் மனு தொடர்பாக அதிமுகவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு பதில் கிடைக்கப் பெற்றதாக கூறினார். இது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஓ.பன்னீர்செல்வம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்த விவகாரத்தில் தங்கள் தரப்புக்கு நோட்டீஸ் அளிக்கப்படவில்லை எனவும் தங்களது தரப்பையும் கேட்ட பின்னரே முடிவெடுக்க உத்தரவிட வேண்டுமெனவும் கோரிக்கை வைத்தார்.

இதனையடுத்து, சூர்ய மூர்த்தியின் மனு குறித்து 4 வாரங்களில் முடிவெடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கேட்க வேண்டுமெனவும் உத்தரவிட்டனர்.



நீலகிரி மாவட்டகலெக்டர்அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் குட்டத்தில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவதற்கும் தொழிற்கடனாக 5 பயனாளிகளுக்கு ரூ.18,45,967 மதிப்பில் 30 சதவீத மானியத்தொகை ரூ.5,53,780 மதிப்பில் வங்கி வரைவோலைகளை கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார். உடன் கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் கலெக்டர் சங்கீதா உள்பட பலர் உள்ளனர்.

# கிருஷ்ணகிரி மலையில் இருந்து ராட்சத பாறை உருண்டு விழுந்ததால் பரபரப்பு



கிருஷ்ணகிரி, டிச.6

ஃபெஞ்சல் புயல் காரணமாக கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் கனமழை கொட்டியது. இதனால் ஊத்தங்கரையில் ஏரி நிரம்பி வழிந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்ததால் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஆற்றில் அடித்து செல்லப்பபட்டன. 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் துண்டிக்கப்பட்டது.

இந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று சாரல் மழை பெய்தது. ஆங்காங்கே மழை நீர் சாலைகளில் தேங்கி நின்றது.

தொடர் மழை காரணமாக கிருஷ்ணகிரி பழைய பேட்டையில் உள்ள கிருஷ்ணகிரி மலையில் இருந்து இன்று காலை திடீரென்று ராட்சத பாறை சரிந்து விழுந்தது.

இந்த பாறை அடிவாரத்தில் உள்ள மேல்தெருவில் தெருவில் வசித்து வருபவர் வெங்கடாசலம் என்பவர் வீட்டின் சுற்றுசுவர் மீது விழுந்தது. அதிர்ஷ்டவசமாக அந்த பாறை வெங்கடாசலத்தின் வீட்டின் பின்புறமுள்ள சுற்றுசுவர் மீதும், அந்த சுவரின் அருகில் இருந்த மற்றொரு பாறைமீது மோதி தடுத்து நின்றதால், வீட்டில் வெங்கடாசலத்தின் மனைவி மற்றும் 2 குழந்தைகள் உயிர் தப்பினர்.

மேலும், அந்த மேல் தெருவில் 20க்கும் மேற்பட்டோர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்களும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

பாறை உருண்டு விழுந்தபோது பயங்கர சத்தம் கேட்டதால் வெங்கடாசலம் குடும்பத்தினர், அந்த பகுதியில் வசித்து வந்த பொதுமக்களும் வீட்டுகளை விட்டு வெளியேறி ஓடி வந்தனர்.

இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் தாசில்தார் வளர்மதி, போலீஸ்துணை சூப்பிரண்டு முரளி மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மலையில் இருந்து சரிந்து விழுந்த பாறையை பார்வையிட்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள், மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக மலையில் இருந்து இந்த ராட்சத பாறை உருண்டு வந்து விழுந்துள்ளது என்பது தெரியவந்தது. இந்த ராட்சத பாறையை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்று கூறினர்.

இதைத்தொடர்ந்து அடிவார பகுதிகளில் வசித்து வரும் பொதுமக்களையும், அவர்களது உடைமைகளையும் பத்திரமாக மீட்பு பணிகளில் கிருஷ்ணகிரி போலீசார், தீயணைப்பு துறையினர், மாவட்ட பேரிடர் மீட்பு பணி குழுவினர் ஆகியோர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், அடிவார பகுதியில் 20க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருவதால், அவர்களது குடியிருப்புகளுக்கு இடையே விழுந்த ராட்சத பாறையை எவ்வாறு அகற்றுவது என்பது குறித்து மாவட்ட நிர்வாகத்தினர் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்த பாறை மேலும் உருண்டு விழுந்து சாலை வரை வந்திருந்தால் அடுத்தடுத்து உள்ள 20க்கும் மேற்பட்ட வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் உடல் நசுங்கி பலியாகி இருப்பார்கள். அந்த பாறை சுவற்றின் மீது மோதி நின்றதால் அதிர்ஷ்வடசமாக பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் பெய்த கனமழையால் மண்சரிவு ஏற்பட்டு வீடு புதைந்ததில்அங்குவசித்து வந்த 7 பேரின் உடல்கள் நேற்று மீட்கப்பட்டுள்ள நிலையில் தற்போது கிருஷ்ணகிரியில் பாறை உருண்டு விழுந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# விழுப்புரத்தின் பல்வேறு பகுதிகளில் மக்கள் சாலை மறியல்



விழுப்புரம், டிச.6

பெஞ்சல் புயல் காரணமாக பெய்த வரலாறு காணாத மழையால் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் உள்ள மக்கள் மீளமுடியாத துயரத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். வெள்ளப்பெருக்கால் திரும்பும் திசையெல்லாம் தீவாக காட்சி அளிக்கிறது. அங்கு மீட்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

மழை ஓய்ந்து 2 நாட்களாகியும் விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் குடியிருப்புகளை சூழ்ந்த வெள்ளம் இன்னும் வடியவில்லை. அதுபோல் 3 நாட்களுக்கும் மேலாக மின்சாரம் இல்லாததால் குடிநீர் மற்றும் அத்தியாவசிய தேவைக்காக தண்ணீர் இன்றி பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர்.

இந்த நிலையில், தண்ணீர் வடியாத பகுதிகளில் மீட்புப்பணிகள்நடைபெறவில்லை என்றும், அதிகாரிகள் யாரும் எட்டிப் பார்க்கவில்லை என்றும், தங்களுக்கு நிவாரண பொருட்கள் ஏதும் வழங்கவில்லை எனக்கூறி அப்பகுதி மக்கள் தொடர்ந்து 3வது நாளாக இன்றும் வீதிக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். டி. மேட்டுப்பாளையம் கிராமத்தை சேர்ந்த மக்கள் 100க்கும் மேற்பட்டோர் அங்குள்ளமெயின்ரோட்டுக்கு திரண்டு வந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முத்தாம்பாளையம் பகுதியைச் சேர்ந்த மக்கள் 100க்கும் மேற்பட்டோர் புறவழிச்சாலையில் திரண்டு வந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக விழுப்புரம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. போலீசாரின் பேச்சுவார்த்தைக்கு பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். அதேபோல அரகண்டநல்லூர் பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக திருக்கோவிலூர் விழுப்புரம் சாலையில் வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# திருவண்ணாமலை: மண்சரிவில் சிக்கி உயிரிழந்த 7 பேரின் உடல்கள் ஒரே இடத்தில் தகனம்

திருவண்ணாமலை, டிச.6

திருவண்ணாமலையில் பெஞ்சல் புயல் காரணமாக 2 நாட்களுக்கும் மேலாக இடைவிடாது பலத்த மழை பெய்தது. இந்த மழையானது, மலையையே அசைக்கும் அளவுக்கு வெளுத்து வாங்கியது. இதனால் அண்ணாமலையார் மலையில் வ.உ.சி.நகர்பகுதிக்கு மேலே உள்ள ராட்சத பாறைகள் திடீரென பயங்கர சத்தத்துடன் உருண்டு கீழ்நோக்கி வந்தன.

அதன் காரணமாக பாறைக்கு கீழே உள்ள மண் பெயர்ந்து அருவி போல ஆக்ரோஷமாக வ.உ.சி.நகர் வீடுகளை நோக்கி பொலபொலவென சரிந்ததில் 2 வீடுகளுக்குள் புகுந்து அந்த வீடுகளே மண்ணுக்குள் புதைந்தன. அப்போது ஒரு வீட்டில் இருந்தவர்கள் வெளியேறி விட்டனர். மற்றொரு வீடு கண் இமைக்கும் நேரத்தில் மண் சரிவில் சிக்கியது.

அதுமட்டுமின்றி அத்துடன் பாறைகளும் அடுத்தடுத்து வீட்டின் மீது விழுந்தன. மண்சரிவில் புதைந்த வீட்டில் இருந்த கூலி தொழிலாளி ராஜ்குமார், அவரது மனைவி மீனா, இவர்களது மகன் கவுதம், மகள் இனியா, ராஜ்குமாரின் உறவினர்கள் சுரேஷ் மகள் மகா, மஞ்சுநாதன் மகள் வினோதினி, சரவணன் மகள் ரம்யா ஆகிய 7 பேர் வெளியேற முடியாமல் சிக்கிக்கொண்டனர்.

இதையடுத்து மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தீயணைப்பு படையினர், மாநில பேரிடர் மீட்பு படையினர், தேசிய பேரிடர் மீட்பு படையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். இறுதியில் மண்ணில் புதைந்த 7 பேரும் சடலமாகவே மீட்கப்பட்டனர். பின்னர் மீட்கப்பட்ட உடல்கள் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டது. பிரேத பரிசோதனை நிறைவடைந்த பின்னர் நேற்று இரவு 7 பேரின் உடல்களும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இறந்தவர்களின் உடல்களை கண்ட அவர்களது உறவினர்கள் கதறி அழுதனர்.

இதையடுத்து 7 பேரின் உடல்களுக்கும் உறவினர்கள் இறுதிச் சடங்கு செய்தனர். பின்னர் 7 இறுதி ஊர்வல வாகனங்களில் அவர்களின் உடல்கள் தனித்தனியாக வைக்கப்பட்டு அருகில் உள்ள இடுகாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது.

அப்போது சாலை ஓரத்தில் நின்றிந்த மக்கள் உயிரிழந்தவர்களுக்கு கண்ணீர் மல்க இறுதி அஞ்சலி செலுத்தினர். இதனையடுத்து 7 பேரின் உடல்களும் ஒரே இடத்தில் வைத்து தகனம் செய்யப்பட்டன. இந்த காட்சி காண்போரின் கண்களையும் கலங்க செய்தது.

# ராமநதி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவு

தென்காசி, டிச.6

ராமநதி அணையிலிருந்து நாளை முதல் தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்; தென்காசி மாவட்டம்,ராமநதிபாசனம்,வடகால்,தென்கால்,பாப்பான்கால் மற்றும் புதுக்கால் ஆகியவற்றின் நேரடி மற்றும் மறைமுக பாசனம் 4,943.51 ஏக்கர் நிலங்களுக்கு 1,434ம் பசலி பிசான சாகுபடி செய்வதற்கு நாளை(05.12.2024) முதல் 31.03.2025 வரை 117 நாட்களுக்கு வினாடிக்கு 60 கனஅடி மிகாமல், பாசன பருவ காலத்திற்கு தேவைப்படும் மொத்த தண்ணீர் அளவான 823.92 மி.க.அடிக்கு மிகாமல் இராமநதி நீர்த்தேக்கத்தில் உள்ள தண்ணீரின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்படும் நீர் வரத்தினை கருத்தில் கொண்டு, ராமநதி அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் தென்காசி மாவட்டம்,வடகால், தென்கால், பாப்பன்கால், மற்றும் புதுக்கால் ஆகியவைகளிலுள்ள குளங்களின் பாசன நிலங்கள் மற்றும் நேரடி பாசன நிலங்களில் உள்ள 4943.51 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நாக சைதன்யா மற்றும் சோபிதா துலிபாலாவின் திருமணம்



தெலுங்கு நடிகர் நாகார்ஜுனாவின் மகனும், நடிகருமான நாக சைதன்யா, கடந்த 2017ம் ஆண்டு நடிகை சமந்தாவை திருமணம் செய்து, பின்னர் கடந்த 2021ம் ஆண்டு விவாகரத்து பெற்றார். அதன்பிறகு பல வருடங்களாக நண்பர்களாக பழகி வந்த சோபிதா துலிபாலாவுக்கும், நாக சைதன்யாவுக்கும் கடந்த ஆகஸ்ட் 8ம் தேதி திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. சோபிதா துலிபாலா 'பொன்னியின் செல்வன்' உட்பட பல தமிழ், தெலுங்கு, மலையாளம் படங்களில் நடித்துள்ளார்.

நடிகர் நாக சைதன்யா மற்றும் சோபிதா துலிபாலா திருமணம் இன்று இரவு 8:15 மணிக்கு ஐதராபாத்தில் உள்ள அன்னபூர்ணா ஸ்டுடியோவில் நடைபெற்றது. இந்த திருமணத்தில் சிரஞ்சீவி, பிரபாஸ், ராஜமவுலி, ஒலிம்பிக் பதக்கம் வென்ற பி.வி.சிந்து, ராம்சரண், நயன்தாரா, மகேஷ்பாபு உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர். இதில் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரபலங்கள் மணமக்களை வாழ்த்தி வருகின்றனர். திருமணத்தைத் தொடர்ந்து, இருவரும் திருப்பதி கோயில் அல்லது ஸ்ரீசைலம் கோயிலுக்குச் சென்று ஆசி பெற திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கிடையில் திருமண மண்டபத்தில் மணமக்கள் இருவரும் ஒன்றாக அமர்ந்திருக்கும் புதிய புகைப்படங்கள் இணையத்தில் பரவி வைரலாகி வருகின்றன.

## புஷ்பா 2 சிறப்புக் காட்சிக்கு அனுமதி கிடையாது; கர்நாடக அரசு




கடந்த 2021ம் ஆண்டு இயக்குனர் சுகுமார் இயக்கதில் அல்லு அர்ஜுன் மற்றும் ராஷ்மிகா மந்தனா நடிப்பில் வெளியான படம் 'புஷ்பா தி ரைஸ்'. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் பகத் பாசில் நடித்திருந்தார். இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தற்போது இதன் இரண்டாம் பாகமாக 'புஷ்பா 2' படம் உருவாகியுள்ளது.

இப்படத்திற்கு'புஷ்பா2திரூல்'என்றுபெயரிடப்பட்டுள்ளது. புஷ்பா 2 படத்தில் மைம் கோபி, பிரகாஷ்ராஜ், பிரியாமணி, அஜய் கோஸ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரித்துள்ள இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். மேலும் இப்படத்தில் 'டான்சிங் குயின்' நடிகை ஸ்ரீலீலா நடனமாடியுள்ளார்.

இப்படத்தின் டிரெய்லர் தமிழ், தெலுங்கு, இந்தி, பெங்காலி, மலையாளம் மொழிகளில் வெளியான நிலையில், அல்லு அர்ஜுன் மற்றும் பகத் பாசிலுக்கு இடையேயான வசனங்கள் ரசிகர்கள் மத்தியில் வைரலானது. உலகளவில் சுமார் 12 ஆயிரத்திற்கும் அதிகமான திரைகளில் வெளியாக உள்ளது. இப்படம் நாளை(5.12.2024) வெளியாக உள்ள நிலையில், புஷ்பா2 படத்திற்கான சிறப்புக் காட்சிக்கு அனுமதி கிடையாது என கர்நாடக அரசு உத்தரவிட்டுள்ளது.

# டோவினோ தாமஸ், திரிஷா நடித்துள்ள 'ஐடென்டிட்டி' படத்தின் டீசர் வெளியீடு

டோவினோ தாமஸ் மலையாள சினிமாவில் முன்னணி நடிகர்களில் ஒருவராக வலம் வருபவர். அந்த வகையில் தொடர்ந்து பல படங்களில் பிஸியாக நடித்து வருகிறார். அதேபோல் நடிகை திரிஷா தமிழ் சினிமாவில் மட்டுமல்லாமல் மலையாளம், தெலுங்கு என பல மொழிகளிலும் பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில் தான் டோவினோ தாமஸ் மற்றும் திரிஷா ஆகிய இருவரும் இணைந்து 'ஐடென்டிட்டி' எனும் திரைப்படத்தில் நடித்திருக்கின்றனர். இந்த படத்தில் இவர்களுடன் இணைந்து வினய் ராய் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இந்த படத்தினை அகில் பால், அனஸ்கான் இயக்கியுள்ளனர். அதாவது கடந்த 2020ம் ஆண்டு டோவினோ தாமஸ், அகில் பால் மற்றும் அனஸ்கான் இயக்கத்தில் 'பாரின்ஸிக்' எனும் திரைப்படத்தில் நடித்திருந்தார். இந்த படம் ரசிகர்கள் மத்தியில் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இந்நிலையில் மீண்டும் இந்த கூட்டணி 'ஐடென்டிட்டி' திரைப்படத்தில் இணைந்துள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகமாக இருந்து வருகிறது.

அதன்படி ஆக்சன் கதைக்களத்தில் உருவாகி இருக்கும் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் இணையத்தில் வைரலாகி வருகிறது. இப்படத்தினை ராகம் மூவிஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. ஜேக்ஸ் பிஜாய் இந்த படத்திற்கு இசையமைத்திருக்கிறார். இப்படத்தில் டோவினோ தாமஸ் 2 கதாபாத்திரங்களில் நடித்துள்ளதாக தெரிகிறது.

இந்த நிலையில் தற்போது இப்படத்தின் டீசர் வெளியாகி உள்ளது. இத்திரைப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. விரைவில் படத்தின் அதிகாரபூர்வ ரிலீஸ் தேதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எந்த இடத்திலும் விளையாட தயாராக உள்ளேன் கே.எல்.ராகுல்

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் (பார்டர்கவாஸ்கர் டிராபி) ஆடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2வது போட்டி (பிங்க் பால் டெஸ்ட்) நாளை தொடங்குகிறது.

முதலாவது டெஸ்டில் ரோகித் சர்மா இல்லாததால் ஜெய்ஸ்வாலுடன் இணைந்து தொடக்க ஆட்டக்காரராக கே.எல்.ராகுல் விளையாடினார். தற்போது ரோகித் சர்மா அணிக்கு திரும்பி விட்டதால் 2வது டெஸ்டில் அவர் தொடக்க ஆட்டக்காரராக விளையாட வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால் லோகேஷ் ராகுல் பின்வரிசைக்கு தள்ளப்படுவார்

இந்நிலையில், இது குறித்து செய்தியாளர் சந்திப்பில் ராகுலிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதில் அளித்து ராகுல் கூறியதாவது, பேட்டிங்கில் எந்த வரிசையிலும் விளையாட தயாராக இருக்கிறேன். ஆடும் லெவனில் இடம் கிடைத்தால் போதும். அது எந்த இடமாக இருந்தாலும் சரி, களம் கண்டு அணிக்காக பங்களிப்பு அளிக்க விரும்புகிறேன். இந்திய அணிக்காக பல வரிசையில் விளையாடி இருக்கிறேன்.

தொடக்க காலங்களில் முதல் 2025 பந்துகளை எதிர்கொள்வது தொழில்நுட்ப ரீதியாக இல்லாமல் மனரீதியாக சற்று சவாலாக இருந்தது. எப்போது அதிரடி காட்ட வேண்டும்?, எவ்வளவு நேரம் எச்சரிக்கையாக ஆட வேண்டும்? போன்ற விஷயங்கள் மனதுக்குள் ஓடிக்கொண்டு இருக்கும்.

ஆனால் தற்போது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் பல இடங்களில் விளையாடி பழக்கப்பட்டு விட்டதால், எனது இன்னிங்சை எப்படி சமாளிக்க வேண்டும் என்ற திட்டம் என்னிடம் இருக்கிறது. நான் தொடக்க வீரராக விளையாடினாலும் சரி, மிடில் வரிசையில் விளையாடினாலும் சரி, முதல் 3040 பந்துகளை சமாளித்து விட்டால், அதன் பிறகு எளிதாக ஆட முடியும். அதில் எனது கவனத்தை செலுத்த முயற்சிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# ஜிம்பாப்வேவுக்கு எதிரான 3வது டி20: விளையாடும் வீரர்களை அறிவித்த பாகிஸ்தான்



ஜிம்பாப்வேவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடி வருகிறது. இதில் ஒருநாள் தொடரை 21 என்ற கணக்கில்பாகிஸ்தான்கைப்பற்றியது. இந்தநிலையில்இருஅணிகளுக்கும் இடையேயான டி20 தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் இரு ஆட்டங்களில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. இதன் மூலம் 20 என டி20 தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியுள்ளது . இந்த நிலையில், ஜிம்பாப்வே பாகிஸ்தான் அணிகளுக்கும் இடையேயான 3வது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று நடைபெற உள்ளது.

இதையடுத்து இந்த போட்டியில் விளையாடும் வீரர்களை (பிளேயிங் லெவன்) பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இந்த அணிக்கு சல்மான் அலி ஆகா கேப்டனாகவும், உஸ்மான் கான் விக்கெட் கீப்பராகவும் செயல்பட உள்ளனர்.

பாகிஸ்தான் அணி விவரம்: உமைர் பின் யூசுப், சாஹிப்சாதா பர்ஹான், உஸ்மான் கான் (விக்கெட் கீப்பர்), சல்மான் அலி ஆகா (கேப்டன்), தயாப் தாஹிர், காசிம் அக்ரம், அராபத் மின்ஹாஸ், ஜஹந்தத் கான், முகமது அப்பாஸ் அப்ரிதி, முகமது ஹஸ்னைன், சுப்யான் மோகிம்.

## ஐ.சி.சி. தலைவரான ஜெய்ஷா... இந்திய கிரிக்கெட் வாரியத்தின் புதிய செயலாளர் யார்...?



இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயலாளராக இருந்த ஜெய்ஷா சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) புதிய தலைவராக கடந்த 1ந் தேதி பொறுப்பேற்றார். இதனால் இந்திய கிரிக்கெட் வாரியத்தில் அவர் வகித்த செயலாளர் பதவி காலியாக உள்ளது. கிரிக்கெட் வாரிய விதிப்படி இந்த பதவியை 45 நாட்களுக்குள் நிரப்ப வேண்டும். எனவே அடுத்த மாதம் 2வது வாரத்துக்குள் புதிய செயலாளரை நியமிக்க வேண்டும். இந்திய கிரிக்கெட் வாரியத்தின்தற்போதையநிர்வாகிகளின் பதவிகாலம் அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. எனவே புதிய செயலாளரின் பதவி காலம் சுமார் ஒரு ஆண்டு தான் உள்ளது. புதிய செயலாளருக்கான போட்டியில் குஜராத் மாநில கிரிக்கெட் சங்க செயலாளர் அனில் பட்டேல், இந்திய கிரிக்கெட் வாரிய இணை செயலாளர் தேவ்ஜித் சைகியா (அசாம்) ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.